முத்தரசி
முத்தரசி
கலை இலக்கியப் பண்பாட்டுத் தமிழ் ஆய்விதழ்
VOLUME : 1 ISSUE : 1 AUG- 2023
2023

# அருள்மிகு அங்காள பரமேஸ்வரி அம்மன் திருக்கோவில்

முனைவர் ப.நிவேதிதா,
உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை,
மதுரை சிவகாசி நாடார் பயோனியர் மீனாட்சி பெண்கள் கல்லூரி, பூவந்தி..

## முன்னுரை

அருள்மிகு அங்காள பரமேஸ்வரி அம்மன் ஆலயம் திருச்சி மாவட்டத்தில் உள்ள நாவலூர் குட்டப்பட்டு என்னும் ஊரில் அமையப்பெற்றுள்ளது. இத்திருக்கோவில் ஒரே குலத்தைச் சேர்ந்தவர்கள் வழிபடும் குலதெய்வக் கோவிலாகும். இக்கோவிலினைத் திருச்சியைச் சார்ந்த மக்களும் வழிபடுவது குறிப்பிடத்தக்கது. சென்னை, விருதுநகர், மதுரை, சிவகங்கை, மானாமதுரை, பரமக்குடி, திருச்சி, திண்டுக்கல் போன்ற பல்வேறு பகுதிகளைச் சேர்ந்த ஒரே குலமக்கள் வழிபடுகின்றனர். இவர்கள் வெள்ளாளர் என்னும் இனத்தைச் சேர்ந்த மக்களாவர். "ஒவ்வொரு சாதியினரும் பல குலங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளனர். ஒவ்வொரு குலத்திற்கும் ஒரு தெய்வம் உண்டு. இன்றும் நாட்டுப்புறங்களில் அந்தந்த குலத்தெய்வத் துணை எனத் திருமண அழைப்பிதழில் அச்சிடுவதைக் காணலாம். ஒரே குலதெய்வத்தை வழிபடுபவர்கள் அனைவரும் பங்காளிகளாவர்."[1] என்ற கூற்று இங்கு ஒப்பிடத்தக்கது. தொடக்க காலத்தில் சிறிய அளவிலான கருவறையை மட்டுமே கொண்டதாக விளங்கியது இக்கோவில். இக்குலமக்களின் கடினமுயற்சியால் இன்று பெரிய அளவில் வளர்ச்சி பெற்று பல பரிவார தெய்வங்களைக் கொண்ட திருக்கோவிலாகக் காட்சியளிக்கிறது. இத்தகு சிறப்பு வாய்ந்த இத்திருக்கோவிலைப் பற்றி விரிவாக விளக்குவதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

## திருக்கோவில் தோன்றிய வரலாறு

ஆதி காலத்தில் இக்குலத்தைச் சேர்ந்த மக்களுக்கு பகவதி அம்மனே குலதெய்வமாக இருந்துள்ளது. இத்தெய்வம் புதுக்கோட்டை மாவட்டத்தில் உள்ள குக்கிராமமாகிய நரியப்பட்டியில் அமைந்துள்ளது. இதனை குலதெய்வமாக வழிபட்ட இவர்களின் மூதாதையருள் ஒருவருக்கு குழந்தைப்பேறு இல்லாத பெருங்குறை ஏற்பட்டது. இதனால் வருந்திய அவர்களிடம் உப்பிலியக்குடியில் உள்ள அங்காள பரமேஸ்வரி அம்மனை வழிபடுமாறு சிலர் அறிவுறுத்தியுள்ளனர். இவர்களின் ஆலோசனையை ஏற்று அருகில் உள்ள அங்காள பரமேஸ்வரி அம்மனை வழிபடத் தொடங்கியுள்ளனர். அங்காள பரமேஸ்வரி அம்மன் திருக்கோவிலும் புதுக்கோட்டை மாவட்டத்தில் உள்ள நரியபட்டிக்கு மிக அருகில் அமைந்த ஊரான உப்பிலியக்குடியில் அமைந்துள்ளது. இவ்வம்மனிடம் குழந்தை செல்வத்தை வேண்டி வழிபடலாயினர். வேண்டுதலின்படி மகப்பேறு கிடைத்தால் அங்காள அம்மனையே குலதெய்வமாக ஏற்றுக்கொள்வதாக மனம் உருகி வழிபட்டனர். இவர்களின் வேண்டுதலுக்குச் செவிசாய்த்த அம்மன் ஆண் குழந்தையை வழங்கியது. அங்காள பரமேஸ்வரி அம்மனின் அருளால் மகப்பேறு கிடைக்கப் பெற்றதாக அகம் மகிழ்ந்தனர். பின்னர் அங்காள பரமேஸ்வரி அம்மனையே குலதெய்வமாக வழிபடத் தொடங்கினர். இதன் காரணமாகவே இக்குலத்தைச் சேர்ந்தவர்களுக்கு அங்காள பரமேஸ்வரி அம்மன் குலதெய்வமாகியது. பகவதி அம்மனைக் காட்டிலும்

முத்தரசி
கலை இலக்கியப் பண்பாட்டுத் தமிழ் ஆய்விதழ்
2023
VOLUME : 1 ISSUE : 1 AUG- 2023

அங்காளம்மனை உயர்வாக எண்ணி வழிபட்டனர். இருப்பினும் பழைய குல தெய்வத்தை மறக்காமல் இருதெய்வங்களையும் வழிபடும் புதிய மரபு இவர்களிடம் உண்டாகியது.

கால ஓட்டத்தில் இக்குலத்தை சேர்ந்த மக்கள் பல்வேறு பகுதிகளுக்குச் சென்று குடியேறியதால் இவ்விரண்டு கிராமங்களுக்கும் சென்று வழிபடுவது இவர்களுக்குக் கடினமாக இருந்தது. மேலும் உப்பிலியக்குடியில் உள்ள அங்களம்மன் வேறு சமுதாயத்தினரின் குலதெய்வமாக விளங்கியமையால் இக்குல மக்கள் மாற்றுவழியைச் சிந்தித்தனர். இதன் விளைவாக இக்குலத்தைச் சேர்ந்தவர்கள் மட்டுமே வழிபடுவதற்கென புதிய கோவிலை உருவாக்கும் முயற்சியில் ஈடுபட்டனர். இதன்படி 1995 ஆம் ஆண்டு திருச்சியிலிருந்து திண்டுக்கல் செல்லும் சாலையில் திருச்சி மாவட்டத்தில் உள்ள நாவலூர் குட்டப்பட்டு என்னும் ஊரில் உப்பிலியக்குடியில் உள்ள மூலக்கோவிலிலிருந்து பிடிமண் எடுத்து வந்து, புதிய கோவிலை உருவாக்கினர். இவ்வாறு தனியே புதியகோவிலை உண்டாக்கினாலும் மூலக்கோவில்கள், புதிய கோவில் என மூன்று திருக்கோவில்களையும் வழிபடும் முறை இவர்களிடம் உருவாகியது. மூலக்கோவில்களுக்குச் சென்று வழிபடாமல் புதிய கோவிலுக்கு மட்டும் சென்று வழிபட்டால் ஏதேனும் தீங்கு ஏற்படும் என்ற அச்சமே இத்தகு வழிபாட்டிற்கு காரணம் ஆகும்.

**திருக்கோவிலின் அமைப்பு**

அங்காள பரமேஸ்வரி அம்மன் திருக்கோவில் நாவலூர் குட்டப்பட்டில் அமைக்கும் போது கோவில் பங்களிகளில் ஒரு குடும்பத்தைச் சேர்ந்தோர் கோவிலுக்கென நிலங்களைத் தானமாக வழங்கினர். அவர்கள் வழங்கிய நிலப்பரப்பிலேயே கோவில் எழுப்பப்பட்டது. கோவில் பங்காளிகளிடம் கட்டிடநிதி வாங்கியே கருவறை கட்டப்பட்டது. எனவே கோவில் கட்டத் தொடங்கிய ஆரம்ப காலத்தில் அங்காளம்மன் அழகுற காட்சியளிக்கும் கருவறை மட்டுமே உருவாக்கப்பட்டது. பின்னர் கருவறையின் அளவினை ஒத்த அமைப்புடையதான முகமண்டபம் ஏற்படுத்தப்பட்டது. “கருவறைக்கு முன் உள்ள மண்டபம் முன் மண்டபம் அல்லது முக மண்டபம் என்று பெயர் பெறும். முகமண்டபத்தின் அளவானது கருவறையின் அளவினை ஒத்ததாக இருக்க வேண்டும்.”[2] என முன்மண்டபம் குறித்து கூறுவர். காலமாற்றத்தில் கோவில் படிப்படியாக வளர்ச்சி அடைந்தது. சிறிது சிறிதாகப் பங்காளிகளிடமும் பக்தர்களிடமும் ஊர்மக்களிடமும் நிதி திரட்டி மாகமண்டபம் ஏற்படுத்தப்பட்டது. இதன் பின்னர் ஒவ்வொரு திருவிழாவின் போதும் ஆண்டுதோறும் கோவில் பங்காளிகளிடம் திருக்கோவில் பணிக்கெனத் தனியே நிதி திரட்டப்பட்டது. இந்நிதியின் உதவியுடன் சுற்றச்சுவர் எழுப்பப்பட்டது. பின்னர் மடைப்பள்ளியும் மக்களின் தேவைக்காக குளியலறைகளும் அமைக்கப்பட்டன. இறுதியாக கடந்த 2016 ஆம் ஆண்டு ஆலயத்தை புதுப்பிக்கும் விதமாக குடமுழுக்க விழா நடைபெற்றது. இவ்விழாவின் போதே கருவறைக்கு மேல் சிகரமும், மகாமண்டபத்தில் பல்வேறு பரிவார தெய்வங்களும் உருவாக்கப்பட்டன என்பது சுட்டத்தக்கது.

**பரிவார தெய்வங்கள்**

அருள்மிகு அங்காள பரமேஸ்வரி அம்மன் ஆலயத்தில் அமர்ந்த கோலத்தில் காட்சியளிக்கிறாள். அம்மனுக்கு எதிரே அம்மனின் வாகனமும், சூலாயுதமும் பிரதிஸ்டை செய்யப்பட்டுள்ளது. அம்மனின் கருவறை வாயிலுக்கு முன்பாக அம்மனின் வலப்பக்கத்தில் கற்பக விநாயகரும் இடப்பக்கத்தில் முருகப்பெருமான் வள்ளி, தெய்வானையுடனும் காட்சியளிக்கின்றனர்.



SAMPLE

முத்தரசி
கலை இலக்கியப் பண்பாட்டுத் தமிழ் ஆய்விதழ்
VOLUME : 1 ISSUE : 1 AUG- 2023
2023

இவை போன்றே மகாமண்டபத்தின் உட்புறத்திலும் வெளிப்புறத்திலும் குபோரலிங்கம் உடனுறை சொர்ணாம்பிகை அம்மனும், உருமக்கருப்பசாமி, பகவதி அம்மன், மதுரைவீரன், ஆகோர வீரபத்திரர், இருளப்பர், பேச்சியம்மன், பாப்பாத்தி அம்மாள், பத்திரகாளியம்மன், அரசமரத்தடி விநாயகர், இராகு, கேது போன்ற பரிவார தெய்வங்கள் பிரதிஸ்டை செய்யப்பட்டுள்ளன. இத்திருக்கோவிலில் இப்பரிவார தெய்வங்கள் அமைத்ததற்கான காரணம் யாதெனில் இத்தெய்வங்கள் அனைத்தும் மூலக்கோவிலனான உப்பிலியக்குடி அங்காளம்மன் கோவிலில் உள்ள பரிவார தெய்வங்கள் ஆகும். அங்காளம்மன் எவ்வாறு மூலக்கோவிலில் உள்ளபடி பிரதிஸ்டை செய்யப்பட்டதோ அதே போன்றே பிற தெய்வங்களும் அமைக்கப்பட்டு வழிபாடு செய்யப்படுகிறது. நரியப்பட்டியில் உள்ள ஆதிமூல தெய்வமாகிய பகவதி அம்மனையும் இங்கு உருவாக்கும் முயற்சியின் பலனாகவே பரிவார தெய்வமாக பகவதி அம்மனும் அமைந்துள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

**வழிபாடுகள்**

அம்மனை வழிபட்டால் வேண்டிய யாவையும் நிறைவேறும் என்பது இக்குல மக்களின் நம்பிக்கையாக உள்ளது. நாள்தோறும் நடைபெறும் பூசைமுறைகள் இக்கோவில் சிறப்புற நடைபெறுகிறது. பிரதோசம், கார்த்திகை, சங்கடகர சதுர்த்தி, சிவராத்திரி போன்ற நாட்களில் சிறப்பு பூசைகளும் நடைபெறுவது வழக்கமாக உள்ளது. இவை தவிர ஆண்டு தோறும் வைகாசி பௌர்ணமி அன்று அம்மனுக்கு திருவிழா கொண்டாடப்படுகிறது. அப்போது அம்மனுக்கு அபிசேகமும் ஆராதனைகளும் நடைபெறும். அம்மன் வைகாசி பௌர்ணமி அன்று சந்தனக் காப்பு அலங்காரத்தில் காட்சியளிப்பாள். மேலும் திருவிழா நாளன்று பங்காளிகள் பலர் ஸ்ரீரங்கம் கோவிலுக்கு அருகில் உள்ள காவேரி ஆற்றங்கரைக்குச் சென்று காவேரி நீரைக் கொண்டு வருவர். இந்நீரினைக் கொண்டே அம்மனுக்கு நீராடல் நிகழ்வு நடைபெறும். இத்திருவிழாவின் முக்கிய நிகழ்வு கரகமெடுத்தலாகும். மேலும் இந்நீர் கரகத்திலும் ஊற்றப்படுவது சுட்டத்தக்கது.

**அம்மன் வழிபாட்டு பாடல்**

பல்வேறு அம்மன் பாடல்கள் இத்திருகோவிலில் ஒலிக்கப்பட்டாலும்

“ஓம் உருமகருப்பே போற்றி
ஓம் நரியப்பட்டி பகவதியே போற்றி
ஓம் அங்காள பரமேஸ்வரி தாயே போற்றி
ஓம் மதுரை வீரனே போற்றி
ஓம் அகிலாண்ட நாயகியே போற்றி
……………………………………..”

என்ற பாடலே அங்காள பரமேஸ்வரி அம்மனுக்கென தனிச்சிறப்பு வாய்ந்த பாடலாக கருதப்படுகிறது. எனவே இது பக்தர்களால் நாள்தோறும் போற்றி ஒலிக்கப்படுகிறது.

**கோவிலுக்கான நிதிகள்**

கோவில் பங்காளிகள் மாதம்தோறும் கோவிலுக்கென தங்களால் இயன்ற அளவு தொகையை நன்கொடையாக வழங்குகின்றனர். இதன்மூலம் மின்சார கட்டணமும், கோவில் பூசாரி மற்றும் பிற பணியாளர்களுக்கான மாத ஊதியமும் வழங்கப்படுகிறது. இவை தவிர



SAMPLE

முத்தரசி
2023
முத்தரசி
கலை இலக்கியப் பண்பாட்டுத் தமிழ் ஆய்விதழ்
VOLUME : 1 ISSUE : 1 AUG- 2023

நாள்தோறும் நடைபெறும் பூசைக்குத் தேவையான பொருட்கள் உண்டியலில் சேரும் நிதியிலிருந்து வாங்கப்படுகின்றன. பங்களாளிகளிடமும் பெண்ணடி மக்களிடமும் வாங்கப்படும் வரியின் மூலமே ஆண்டுதோறும் நடைபெறும் திருவிழாவிற்கான தொகை செலவிடப்படுகிறது. கோவிலின் வரவு செலவு கணக்குகள் குறித்து ஆண்டு தோறும் நடைபெறும் திருவிழாவின் நிறைவு நாளன்று பாங்களிகளிடம் விவாதிக்கப்படுவது உண்டு.

**விழாக்கள்**

மாகசிவராத்திரி அன்று பங்காளிகள் அனைவரும் ஒன்று சேர்ந்து கோவிலுக்குச் சென்று வழிபடும் முறை உள்ளது. அருள்மிகு அங்காள பரமேஸ்வரி அம்மனுக்கு ஆண்டு தோறும் வைகாசி பௌர்ணமி அன்று திருவிழா பெரிய அளவில் கொண்டாடப்படுகிறது. இவ்விழாவிற்காக பங்காளிகள் அனைவரும் பல்வேறு ஊர்களில் இருந்து வருகின்றனர். திருவிழாவின் முதல் நாளே இவர்கள் வந்துவிடுகின்றனர். மூலதெய்வமாகிய பகவதி அம்மனின் கோவிலுக்கு முதலில் சென்று பொங்கல் வைத்து வழிபடுகின்றனர். பின்னர் உப்பிலியக்குடியில் உள்ள மற்றொரு மூல தெய்வமாகிய அங்காள பரமேஸ்வரி அம்மனுக்கும் பொங்கல் வைத்து வழிபடுகின்றனர். இன்றளவும் பாங்காளிகள் அனைவரும் தங்கள் குழந்தைகளுக்கு முதல் மொட்டை எடுத்தல் மற்றும் காது குத்துதல் போன்ற சடங்குகளை இத்திருத்தலத்திலேயே செய்து முடிக்கின்றனர். குறிப்பாக வைகாசி திருவிழாவின் போதே இச்சடங்குகளையும் நடத்துவது குறிப்பிடத்தக்கது. இவ்வழிபாட்டிற்கு பின்னர் இரவிலே புதிய கோவிலுக்குச் சென்று அங்கேயே தங்கிவிடுகின்றனர். மறுநாள் அம்மனுக்கு காவேரி நீரில் அபிடேகம் நடைபெறும். அதன் பின்னர் கரகமெடுத்தல் என்னும் நிகழ்வு நடைபெறும். இறுதியாக அம்மன் சந்தன அங்காரத்தில் காட்சியளிப்பாள்.

**நம்பிக்கை**

அங்காள அம்மனை வழிபட்டால் குழந்தை பேறு கிடைக்கும் என்ற நம்பிக்கை உள்ளது. இக்குலமக்கள் தங்கள் குழந்தைகளுக்கு அம்மனின் பெயரையோ அல்லது ‘அ’ என்னும் எழுத்தை முதல் எழுத்தாகக் கொண்ட பெயரினையோ சூட்டுவர். இக்கோவில் பங்களாளிகள் தங்கள் குழந்தைகளுக்குத் தலைமொட்டை எடுக்கையில் குடும்பத்துடன் அதாவது தாய், தந்தை, குழந்தை என அனைவரும் இணைந்தே மொட்டை எடுக்கும் பழக்கமும் இவர்களிடம் உண்டு. அப்போது தான் தங்கள் குழந்தைக்கு எவ்வித தீங்கும் நேராது என்பது இவர்களின் நம்பிக்கையாக உள்ளது. மேலும் எந்த ஒரு நல்ல நிகழ்வினையும் தொடங்கும் முன் குலதெய்வத்தை வழிபடுதல் என்ற நம்பிக்கை மக்களிடம் உண்டு. அவ்வகையில் புதிதாக வீட்டு கட்டுதல், திருமணம், புதிய தொழில் தொடங்குதல், புதிதாகப் பணிக்கு செல்லுதல் போன்ற செயல்களின் தொடக்கமாக இவ்வம்மனை வழிபட்டே தொடங்கும் முறையும் உள்ளது. மேலும் புதிய வாகனங்கள் வாங்குவோர் அதை முதலில் அம்மனிடம் வைத்து வழிபடும் வழக்கத்தையும் கொண்டுள்ளனர். அம்மனிடம் வைத்து வழிபட்டால் மட்டுமே எவ்வித தீங்கும் நேராது என்ற நம்பிக்கையும் உண்டு. மேலும் புதிதாக தங்க நகைகள் வாங்கினாலும் அதனை அம்மனுக்கு சூட்டி அழகு பார்த்த பிறகே அவர்கள் அணியும் வழக்கமும் இவர்களிடம் உண்டு. இதன் மூலம் செல்வம் பெருகும் என்று இக்குல மக்கள் நம்பிக்கைக் கொண்டுள்ளனர். தங்களது வேண்டுதல்கள் நிறைவேறிவிட்டால் அம்மனுக்கு சேலை செலுத்துதல் மற்றும் கோவிலுக்குத் தேவையான பொருட்களைக் காணிக்கையாக வழங்குதல் என்னும் முறைகளையும் இக்கோவில் பங்காளிகள் கடைபிடிக்கப்படுகின்றனர்.

முத்தரசி
2023
முத்தரசி
கலை இலக்கியப் பண்பாட்டுத் தமிழ் ஆய்விதழ்
VOLUME : 1 ISSUE : 1 AUG- 2023

**முடிவுரை**

குலதெய்வ வழிபாடு என்பது தமிழக மக்களின் பண்பாட்டோடு இரண்டற கலந்த நிகழ்வாகும். ஒரு குலத்தை சேர்ந்த மக்கள் எவ்வாறு அங்காள அம்மனை குல தெய்வமாக வழிபடத் தொடங்கினர் என்பதையும் அவர்களின் முயற்சி மற்றும் நம்பிக்கை குறித்தும் இக்கட்டுரையின் வழி அறியமுடிகிறது. அங்காள அம்மன் என்னும் குலதெய்வ வழிபாட்டின் காரணம் மற்றும் வழிபாட்டு முறைகள் போன்றவற்றை ஆராய்வதன் மூலம் ஒரு குறிப்பிட்ட சமூதாயத்தின் சமூகப் பண்பாட்டினை அறிந்து கொள்ள முடிகின்றது. பல்வேறு சமூகப் பண்பாட்டுக் குழுக்களுடையத் தொகுப்பே தமிழ்ப் பண்பாடு என்பது நோக்கத்தக்கது.

**அடிக்குறிப்புகள்**

1. நாட்டுப்புற இயல், ஆய்வு சு.சக்திவேல், பக் - 225.
2. திருக்கோயில் அமைப்பும் திருவுருவ அமைதியும், முனைவர் அம்மை மணிவண்ணன், பக் - 43.

SAMPLE